537

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-கഠ.] பரிதாபி ஷு ஆவணிமீ [பகுதி-கഠ.

உள்ளுறை.

ஐயவினாவின் விடையுரை:—பத்திராதிபர். சஙஎ

புட்பபந்தம்:—ஸ்ரீமத்-ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை. சசரு

பாண்டிய சாசநம்:—,, A. சடகோபராமாநுஜாசார்யர். சருங

வானசாஸ்திரம்:—,, சோமசுந்தரதேசிகர். சருசு

நுண்பொருண்மாலை:—பத்திராதிபர். சசுசு

புத்தகவரவு:—பத்திராதிபர். சசுஅ

திருமந்திர நூறுபாட்டுக் குரை:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர். உரு

மாறனலங்காரம்:—பத்திராதிபர். ஙங

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:—

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

538

உ

அபிதானசிந்தாமணி.

இதுவரை தமிழில் வெளிவராத "அபிதானசிந்தாமணி" என்னும் அரிய பெயரகராதிப் புத்தகமானது மதுரைத் தமிழ்ச் சங்கத்தாராற் பதிப்பிக்கப்பெற்று முடிவடைந்திப்பொழுது கலிகோ பைண்டுசெய்து விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைக்கப்பெற்றிருக்கிறது. இதில் வடமொழி தென்மொழி நூல்களிலும், உலக வழக்கிலும் வழங்கிவரும் பிரசித்திபெற்ற தேவர், முனிவர், அரசர், புலவர் முதலிய பலர்களுடைய பெயரும், அவர்கள் சரித்திரச்சுருக்கமும், நதி, மலை, கடல், தேசம், நகரம் முதலிய பலவற்றின் பெயரும், அவற்றின் விவரணங்கள் பலவுமெழுதப்பெற்றிருக்கின்றன. ராயல் 8-பக்கம் கொண்ட பாரம் 131 உள்ளது. நல்லகாகிதத்திற் றெளிவான எழுத்திற் பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை ரூ 7 (ஏழு) வேண்டுவோர் மதுரைத் தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. SUBBUVENKATARAMA IYER,

Manager.

539

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௦.] பரீதாபி ஸு ஆவணிமீ [பகுதி-௧௦.

ஐயவினாவின் விடையுரை.

(௪௦௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

4-வது வினா:—பிள்ளைப்பெருமாளையங்கார் என்ற பெயரில் ஐயங்கார் என்ற சொல் பகுபதமா? பகாப்பதமா? இலக்கணமென்ன? என்பதே.

பகுபதம், பகாப்பதம் என்னும் பதங்களின் இலக்கணங்கள் நன்னூலுள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் பகுபத விலக்கணமுடையவை பகுபதமெனவும், பகாப்பதவிலக்கணமுடைய வை பகாப்பதமெனவும் பகுத்து வழங்கப்பெறுகின்றன. அப் பகுபத விலக்கணத்துள்,

> "பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலின்
> வருபெயர்.........................பகுபதம்."

என்பதனாற் பொருளாதியாறனுளொன்றனை யுணர்த்துஞ் சொல்லடி யாகப் பிறக்கும் பெயர் பகுபதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பகாப்பதவிலக்கணத்துள்,

> "பகுப்பாற்பயனற்றிடுகுறியாகி
> முன்னேயொன்றாய்முடிந்தியல்கின்ற
> பெயர்.....................பகாப்பதம்."

என்பதனால் பகுதி விகுதி முதலிய வுறுப்புடையதாகப் பகுத்த விடத்து அப்பகுதி முதலிய வுறுப்புக்களுக்குரியவாகிய அவயவப்

*

பொருள் தோன்றாது, இடுகுறியளவாய்த் தொன்றுதொட்டு வழங்கப்படும் பெயர் பகாப்பதமாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ் விலக்கணங்களைக்கொண்டு ஐயங்கார் என்ற சொல்லைப் பகுக்குமிடத்து முதலில் நின்ற ஐ என்பது பகுதியாகவும், இறுதியினின்ற ஆர் என்பது விகுதியாகவும், பகுத்துக்கொள்ளத் தகுதியுடையனவாகக் காணப்படுகின்றன.

அவற்றுள் ஐ என்னும் பகுதி வியப்பென்னுங் குறிப்புணர்த்துமாதலாற் பொருளுடையதாயிற்று. அஃதப்பொருளுணர்த்து மென்பதனை "ஐ வியப்பாகும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலுணர்க.

இறுதி நின்ற ஆர் என்னும் விகுதி ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாய் உயர்வுப்பொருள் குறித்தமையால் அதுவும் பொருளுடையதாகும்.

ஆகவே அவயவப்பொருளால் வியப்புடையார் (அதாவது வியத்தற்குரியார்) என்னும் சமுதாயப்பொருள் தோன்றுகின்றமையால் ஐயங்கார் என்பது பகாப்பதமாகாது, இடையே வேண்டும் பிற பகுபத வுறுப்புப்பெற்ற ஐ யென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயர்ப்பகுபதமாக விருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

இவ்வாறே மற்றும் அவ் வுரிச்சொல்லடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதங்களும் சிலவுள. அவை:—ஐயன், ஐயள், ஐயை, ஐயனர், ஐயர், ஐயன்மார் என்பனவாம்.

இவற்றுள், ஐயன் என்பது வியப்புடையோன், முத்தோன் என்னும் பொருளிற் காரணக்குறியாயும், கடவுள் விசேடத்தில் இடுகுறியாற்றலு முடையதாயும் வழங்கப்பெற்று வருகின்றது. இதற்கு உதாரணம் ஐயனரிதன், தமையன்; ஐயன்கோவில் என்பவற்றிலுள்ள ஐயன் என்னும் பெயராம்.

ஐயள் என்பது வியப்புடையாள் என்னும் பொருளில் வழங்குதல் "ஐயள் அரும்பியமுலையள்" என்னும் ஐங்குறுநூற்றாலுணர்க.

ஐயை என்பது வியப்புடையாள் என்னும் பொருளில் இடுகுறி யாற்றலு முடையதாகிப் பெண்பாற் கடவுள் விசேடத்தில் வழங்கப் பெற்று வருகிறது. இதனை "ஐயை யாமளைமுக்கண்ணி" யென்னும் நிகண்டினாற் காண்க.

ஐயனார் என்பது இடுகுறி யாற்றலுடன் கூடிய ஐயன் என்னும் பெயரே உயர்வுகுறித்து ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியாகிய ஆர் விகுதி பெற்று முற்கூறிய கடவுள்விசேடத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இது "ஐயனார்கோவில்" என்னும் உலகவழக்கில் வெளிப்படையாம்.

ஐயர் என்பது வியப்புடையார் என்னும் பொருளில் உயர்வு பற்றியேனும், சாதிபற்றியேனும் செய்யுள் வழக்கிற் சிறுபான்மை உயர்திணைப்பன்மையிலும், உலகவழக்கில் உயர்த்தற்கட்பன்மையிலும் வழங்கப்பட்டு வருகிறது. உயர்திணைப் பன்மையில் வழங்குதலை "விண்செலன்மரபினையர்க்கேந்தியதொருகை" என்னுந் திருமுருகாற்றுப்படையுட் காண்க. உயர்த்தற்கட்பன்மையில் வழங்கப் பெற்றுவருதலை, "கொள்வதையர்கடம்பவனத்தையே" என்னும் மதுரைக்கலம்பகத்தாலும், மேலோரை ஐயர் என வழங்கும் உலக வழக்காலு முணர்க. சாதிபற்றிவருதலை "ஐயர்வேதியருயர்ந்தோர்" என்னும் நிகண்டினாலறிக.

ஐயன்மார் என்பது, வியப்புடையார் என்னும் பொருளிற் சாதி விசேடத்தில் ஆண்மைப்பன்மைபற்றி வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றுள் ஐயன், ஐயை என்பன பொருள்விசேடங்கருதிச் சொல் வேறுபாடுதோன்ற வழங்கப்படுதல்போல, ஐயனார் ஐயன்மார் என்பனவும் தம் பொருள்வேறுபாடுதோன்றச் சொல்வேறுபட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பொருள்விசேடங்குறித்துச் சொல்வேறுபட வழங்கும் வழக்குப் பலவுள.

அவ்வாறே வியப்புடன் ஒருவகைக் கிளைப்பொருண்மையும் கருதியவிடத்து, வியப்புணர்த்திப் பொதுமையினின்ற ஐயர் என்பதன் வேறுபாடுதோன்ற ஆர்விகுதி வருங்கால்,

"பதமுன்விகுதியும்பதமுமுருபும்
புணர்வழியொன்றும்பலவுஞ்சாரியை
வருதலுந்தவிர்தலும்விகற்பமுமாகும்."

என்பதனுல் அப்பகுதி விகுதிக்கேற்ற அம்மும் குவ்வுமாகிய சாரியை களை இடையே நியமமாகவரப்பெற்றுப் புணர்ச்சிவிதியால் மகரந் திரிந்து உகரங்கெட்டுழி ஐயங்கார் எனமுடியும்.

இவ்வாறே என் என்னும் பகுதியடியாகப் பிறக்கும் உயர்திணைப் பன்மை யெதிர்காலவினைமுற்று, அர்விகுதி பெற்றுச் செய்யுண்முடி பெய்தியவிடத்து என்மர் எனமுடிதலும், அதுவே ஆர்விகுதிபெற்று அம்முடிபெய்தியவிடத்து என்மார் எனமுடியாது நியமமாயிடையே அப் பகுதிவிகுதிக்கேற்ற அன்சாரியை வரப்பெற்று என்மனர் என முடிதலும் காண்க.

இனி இங்ஙனமன்றி ஐயன் என்னும் பெயரே ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியாங்கால் ஆர் விகுதிபெற ஐயனர் என இடுகுறியா கிக் கடவுள் விசேடத்தில் ஆற்றல்பெற்றுவிட்டமையால், அதனின் வேருக அப்பெயர் இடுகுறியாகாது கிளைப்பொருண்மைகுறித்து ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியாங்கால், ஆர்விகுதி பெற்றுழி அப் பொருள் வேறுபாடுதோன்றக் ககர விடைநிலைபெற்று னகர மெய் திரிந்து, அண்ணங்கார், அப்பங்கார் என்னும் பெயர்கள்போல ஐயங் கார் என முடியுமென்பது மொன்று. இவ்வாறு சிலபெயர், நியம மாகக் ககரவிடை நிலைபெற்று முடியுமென்பதனைக் கொண்கன், வண் ணக்கர் முதலிய சொற்களுள்ளும் காண்க.

இப் பெயர் ஐயர் என்னும் பெயர்ப்பொருள் கிளைத்த காலத்தில் அக் கிளைக்கு ஆன்றோர் படைத்திட்ட காரணவாக்கப்பெயராகக் காணப்படுகிறது.

மேற்காட்டியவாறு பகுதி, விகுதி, சாரியை, (அல்லது இடை நிலை) சந்தி, விகாரங்களாகிய பகுபத வுறுப்புக்களால் முடிந்த பெய ராகக் காணப்படுதலாற் பகுபதமாமென்பது பொருந்தும்.

ஆயின், தமிழ்மொழியன்றென விடைகூறிய தென்னெனில் ஐயன் என்னும் பெயரே ஆர்ய: என்னும் வடமொழிதிரிந்த பாகதச்

சொல்லாகக்கொள்ளும் ஒரு சாரார் கொள்கைபற்றியும், தமிழ்நாட்டில் முற்கால வழக்கில் ஐயங்கார் என்னும் பெயர் வழங்கப்பட்டதாகக் காணப்படாமையால், வடுகர்வழங்கும் ஐயகாரு என்னும் பெயரே பிற்காலத்திற் றிசைச்சொல்லாக வந்து திரிந்து வழங்கப்பெற்று வரக் கூடுமென்னும் ஒரு சாரார் கொள்கைபற்றியுங் கூறியதெனக் கொள்க.

5-வது வினா:—

"தாமரைமுகங்கள்வாட்டுந்தண்பனிக்காலந்தன்னிற்
காமர்வெம்பகனீட்டித்தவண்ணமுங்கணவர்த்தீர்ந்தோர்
ஏமுறுவேனிற்காலமிரவுநீட்டித்தவாறுந்
தூமமென்கூந்தற்செவ்வாய்த்துடியிடைதுயரவன்றே.

1. இப்பாட்டினுள் தண்பனிக்காலமென்றது எந்தமாதங்களை?

2. அவற்றுள் பகனீட்டித்த லெங்ஙனம்?

3. கணவர்த்தீர்ந்தோர் ஏமுறு வேனிற்காலம்; என்றதெந்த மாதங்களை?

4. அவற்றுள் இரவு நீட்டித்த லெங்ஙனம்?

5. அந்நீட்டம் துடியிடை துயருறுதற் கேதுவாமா றெங்ஙனம்? என்பனவாம்.

இவற்றுள் முதலாவது வினாவிற்கு விடை:—

முன்பனிப்பருவம் பின்பனிப்பருவம் என இருவேறு கூறுபட்ட பனிக்காலத்துள் இன்னதென விதந்துகூறாது தாமரை முகங்கள் வாட்டுந் தண்பனிக்காலமெனப் பொதுப்படக் கூறியிருத்தலால் அக்கூற்று அவ்விரு பருவமுமடங்கிய மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களையே குறித்ததெனக்கொள்க.

இரண்டாவது வினாவிற்கு விடை:—

அம் மாதங்களிற் பகல் நீட்டித்திருப்பதன்று; குறுகியேயிருக்கும். இரவு நீட்ட முண்மையால்; இரவு நீட்டமேயுள்ளதென்பது பின்பு காட்டப்படும்.

மூன்றாவது வினாவிற்கு விடை:—

இளவேனிற் பருவமும் முதுவேனிற் பருவமுமென இரு கூறுபட்ட வேனிற் காலத்துள் இன்னதென விதந்துகூறாது கணவர்த் தீர்ந்தோர் ஏமுறு வேனிற்காலமெனப் பொதுப்படக் கூறியிருத்தலால் அக் கூற்று அவ்விரு பருவமுமடங்கிய சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களைக் குறித்ததெனக் கொள்க.

நான்காவது வினாவிற்கு விடை:—

அம் மாதங்களில் இரவு நீட்டித்திருப்பதன்று; குறுகியேயிருக்கும். பகனீட்டிருத்திருத்தலால், பகல் நீட்டித்திருக்குமென்பதும், பின்பு காட்டப்படுவதுகொண்டு கண்டுகொள்க.

ஒவ்வொரு மாதங்களினுமுள்ள இரவுபகல்களின் காலவளவைப் பற்றிச் சோதிட நூலார்,

> சித்திரையுமைப்பசியுஞ்சிரொக்குஞ்சித்திரைவிட்
> டைப்பசிமுன்னைந்துமகசேறும்—ஐப்பசிக்குப்
> பின்னைந்துமாதம்பிறழாதிரவேறும்
> மின்னேவிடுபூமுடி.

என வரையறுத்திருக்கின்றனர். அஃதாவது சித்திரைமாதமும் ஐப்பசிமாதமும் இரவும் பகலும் ஒத்தகடிகையுடையனவென்றும், சித்திரைக்குப்பின்னும் ஐப்பசிக்குமுன்னுமிடையிலுள்ள வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி யென்னும் ஐந்து மாதங்களிலும் பகற்பொழுது நீட்டித்திருக்குமென்றும், ஐப்பசிக்குப்பின்னும் சித்திரைக்கு முன்னுமிடையிலுள்ள கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி யென்னு மைந்து மாதங்களிலும் இராப்பொழுது நீட்டித்திருக்குமென்றும், அந்நீட்டமும் வி, டு, பூ, மு, டி என்னும் கணித சங்கேதக்குறிப்பால் அம்மாதங்களுக்கு முறையே ௩, கவ, கஇ, கவ, ௩ நாழிகையுண்டென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதென்பதே. (இங்குக்காட்டியமாதங்கள் சாந்திராயண மாதங்களெனக் கொள்க. மின்னே என்பது மகடூ முன்னிலை. விடுபூமுடியென்பதனை ஏறுமென்பவற்றோடு தனித்தனி கூட்டுக.)

அவ்வாறு பனிக்காலத்தி னிரவுநீட்டங்கூறப்பட்டதன் அருத்தாபத்தியால் அக்காலத்து மாதங்களில் முறையே அவ்வளவு பகற்

பொழுது குறுகுமென்பதும், வேனிற்காலத்திற் பகற்பொழுதின் நீட்டம் கூறப்பட்டதன் அருத்தாபத்தியால் அக்காலத்து மாதங்களில் முறையே இராப்பொழுதும் அவ்வாறுகுறுகுமென்பதும் பெறப் பட்டன.

பெறவே பனிக்காலத்தில் நீட்டமின்றிக் குறுகியுள்ள பகல் நீட்டித்ததென்றும், வேனிற்காலத்து நீட்டமின்றிக் குறுகியுள்ள இரவு நீட்டித்ததென்றும் கூறிய கூற்றால் அநுபவவிரோதமும் சாத்திர விரோதமுமாகிய மாறுபாடு தோன்றுவதால் முரண்விளைவதாயிற்று.

இம் முரண்விளைவினுக்கு அழிவுகூறாவிடின் மாறுகொளக்கூற லென்னும் குற்றமாம். அக் குற்றந்தீர்தற்கு இப்பாட்டிலுள்ள கூற்றினுள் முரணழிவு கூறப்படாமையால் சந்தர்ப்பத்தைக்கொண்டு குறித்துணர்ந்து கூறவேண்டும்.

இங்குச் சந்தர்ப்பமாவது:— நளனிடத்துக் காதல்கொண்ட தமயந்திகாமவேட்கைமேலீட்டாலாகிய சிந்தைநோயாற் றுயருழத்தலை வருணித்தலாம். காமவேட்கைமேலிட்ட சிந்தனையுடையாட்கு "ஒருபகலாயிரமூழி"யாகக் காலம் நீட்டித்துத் தோன்றுமென்று கூறுவதும், "கங்குலும்பகலுங்கண்டுயிலறியாள்" எனத் துயிலொழிவு கூறுவதும் மரபாதலால், அக் காலநீட்டத்திற்குக் காமவேட்கைமேலிட்ட சிந்தனையாகிய காரணமுண்மையால் முரணழிவுதோன்றியது; ஆதலால் மாறுபடக்கூறுதலின்று. விழைபொருட்பெறுதி யின்பமாதலாற் அதற்கிடையூறாகியகாலநீட்டந் துன்பத்திற்கேதுவாயிற்று.

இங்ஙனங்கொண்டு பொருளுரைக்குமிடத்துத் தூமமென் கூந்தற் செவ்வாய்த்துடியிடை துயருறுமாறு (அவட்கு) தாமரை முகங்கள் வாட்டுந்தண்பனிக் காலந்தன்னிற் காமர்வெம்பகல் நீட்டித்தவண்ணமும், கணவர்த்தீர்ந்தோர் எழுறுவேனிற்கால மிரவு நீட்டித்தவாறும் (ஆயின) எனமுடிக்க. அவட்கு என்னுஞ் சுட்டும், ஆயின என்னும் முற்றும் அவாய்நிலையான் வந்தன. வண்ணம், ஆறு என்னுமிடைச் சொற்கள் இங்கு அந்நீட்டவினைநிகழ்ச்சியின் ஒழுக்குணர்த்தி நின்றன. குறுகியகாலங்களும் அவட்கு நீட்டித்தனவாகக் கூறப்பட்டமை

யால் ஏனை நீண்டகாலங்களும் அவற்றினளவின் மிக நீட்டித்தன வென்பது கூறுமையே பெறப்படும். பெறவே, காலம் வளரக்கண் படைகொள்ளாது ஓராண்டளவுதுயருழந்தனள்; என்பது இப்பாட் டின் கருத்தாகக்கொள்க. இக் கருத்து வடமொழி நைடதகாவி யத்திலு முள்ளது.

இப்பாட்டிற்கு முன்னும்பின்னு முள்ள பல பாடல்களும் தொ டர்பாக வடமொழி நைடதகாவியச்சுலோகங்களின் கருத்தமைந்தன வாகவே பாடப்பட்டிருக்கின்றன. ஆதலாலிப்பாட்டும் அக்காவியச் சுலோகத்தின் கருத்தமைந்ததாகவே யிருக்கவேண்டுமென்று தோன் றுகின்றது. இக்கருத்து அக் காவியத்தின் முதலாவது சருக்கம் நாற்பத்தொன்றும் சுலோகத்திலுள்ளது. அச்சுலோகம் வருமாறு:—

“𑌅𑌹𑍋 𑌅𑌹𑍋𑌭𑌿𑌰𑍍𑌮𑌹𑌿𑌮𑌾 𑌹𑌿𑌮𑌾𑌗𑌮𑍇
𑌪𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌪𑍇𑌦𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌤𑌾𑌂𑌸𑍍𑌮𑌰𑌾𑌰𑍍𑌦𑌿𑌤𑌾𑌂
𑌤𑌪𑌰𑍍𑌤𑍁𑌪𑍂𑌰𑍍𑌤𑌾𑌵𑌪𑌿 𑌮𑍇𑌦𑌸𑌾𑌂𑌭𑌰𑌾
𑌵𑌿𑌭𑌾𑌵𑌰𑍀𑌭𑌿𑌰𑍍𑌬𑌿𑌭𑌰𑌾𑌂 𑌬𑌭𑍂𑌵𑌿𑌰𑍇 ॥” என்பதே

இச் சுலோகத்துக்கு, “சிந்தையுந்துயிலின்மையுமுணர்த்துகின்றது” என அவதாரிகைவைத்து, “காமநோயுற்ற தமயந்திக்குப்பனிக்கா லத்திலும் பகலெல்லாம் பொழுதுவளர்ந்தது. வேனிற்காலத்திலும் இரவெல்லாம் பொழுது வளர்ந்தது. சாத்திரவிரோதமும், அநுபவ விரோதமுமாதலா லிது வியப்பென்பது கருத்து. காமநோயுற்றார்க்கு அவ்வாறு தோன்றுமாதலான் மாறுபாடின்று. இதனாலிவட்கு இடை யறாத சிந்தையுந் துயிலின்மையுங் குறிக்கப்படும்.” என மல்லிநாத ரெழுதிய வியாக்கியானமுமிங்கு நோக்கத்தக்கது.

அவாய் நிலையால்வந்த ஆயினவென்னும்முற்றோடு போலு மென்னு மிடைச்சொற் கூட்டியுரைக்கத் தற்குறிப்பேற்றமுமாம்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

547

உ

*புட்பபந்தம்.

வெண்பா.

"செவ்வி திகழ்பொகுட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய்க் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று."

குறள் வெண்செந்துறை.

"தவளத் தாமரைத் தாதார் கோயி
லவனைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே."

தேவதேவனான ஸ்ரீசோமசுந்தரக் கடவுட்குரிய திருக்கார்த்திகைமீ பௌர்ணமியன்று கார்த்திகை பூரணமாயிருந்தால், அவ்வாண்டின் ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகையாகிய இந்நான்கு மாதங்கள் வரை மழை நன்கு வருஷித்து சுபிக்ஷம் க்ஷேமம் ஆரோக்கியம் முதலியன வுண்டாக்கிப் பயிர்பலிதமாக்கும்.

கார்த்திகைமாதப் பௌர்ணமியில் பரணியுங்கார்த்திகையுங் கலந்துவரின், அதிவெப்பமும் அநாவிருஷ்டியும் கண்டவருஷமும் அவ்வாண்டி லுண்டாகும்.

கார்த்திகைப்பௌர்ணமியில் அஸ்வினி பரணி கார்த்திகை இவை கலந்திருந்தால், சிங்கரவிமுதல் விருச்சிகரவி வரை மத்திய விருஷ்டியாம்.

---

* இந்நூல் வடமொழியிலுள்ளது. இஃது உமாமகேச்வரர் உமாமகேச்வரியார்க்கு உபதேசித்தருளியது. இது மாதம் திதி நக்ஷத்திரம் கிரகங்களின் கூட்டுறவால் உண்டாகும் மழையின் அளவைக் கூறுவது. இத்தகைய நூல் தமிழ்ப்பாஷை அறிந்தார்க்கும் உபயோகமாகும் வண்ணம் பறங்கிப்பேட்டை சு. ஏ. குமாரசுவாமி யாசாரியாரால் வெளியிடலாயிற்று.

கார்த்திகைப் பூர்ணிமையில் உரோகிணிவரின், கால்நடைகட்கும் மனிதர்கட்கும் பயமுண்டு.

கார்த்திகைப் பௌர்ணிமையில் கார்த்திகாதிநக்ஷத்திரங்கள் சமபாதமாயின் சொற்பமழையுமற்பவிளைவுமுண்டு. [சமபாதமென்பது கார்த்திகை பின்இரண்டுபாதமும் உரோகிணி முன்இரண்டுபாதமுஞ் சேர்ந்து வருதல்.]

பரணி கார்த்திகையோடு கலந்தும், கார்த்திகை உரோகிணியோடு கலந்தும் வரும் வருஷங்களில், தேசத்தில் உற்பாதங்களும் அரசர்களுள் யுத்தமும் மனிதர்களுள் பரஸ்பரங் கலகமுமுண்டாகும்.

கார்த்திகைமீ பௌர்ணமிதிதி 60 நாழிகையும், கார்த்திகை நட்சத்திரம் 60 நாழிகையும் இருப்பின், கடகரவிமுதல் துலாரவி வரை நன்மழை பொழியும்.

பூராடத்தில் சூரியப்ரவேசமுதல் மிருகசிரிடம்வரை கர்ப்போட்டமென்ப. பூராடத்தில் சூரியப்ரவேசமுதல் 14நாழிகைவரை * வருஷதாதுக்கள் தோன்றின், திருவாதிரையிற் சூரியப்ரவேசமுதல் நன்மழையுண்டு.

பூராடத்தில் சூரிய ப்ரவேச முதல் 14 நாழிகை வரை மின்னல் இடி மழை நீர்த்தாரா அதிகக்குளிர் அதியுஷ்ணம் காற்று பரிவேடம் இந்திரவில் இவை முதலிய குறிகளுள் ஏதேனு மொன்றைக் காணின், சூரியன் திருவாதிரையிற் பிரவேசிக்கிற ஆனிமீ முதல் நல்ல மழையென அறியலாம்.

தநுசில் இரவி வரும்போது மூலநாளில் வருஷதாதுக்கள்தோன்றின், அந்நாள்முதல் 105 நாள் வரை மழையுண்டு.

தநுசில் ஆதித்தன் வரும்போது பூராடத்தில் வருஷதாதுக்கள் தோன்றின், அவர் புனர்பூசத்தில் வருங்காலே மழையுண்டு. மூலமுதல்

---

*வருஷதாதுக்கள் என்பன:—மேகம், மின்னல், இடி, நீர்க்கால், குளிர்ச்சி, அதியுஷ்ணம், காற்று, மழைதூற்றல், (சிறுமழைத்தாரை) பரிவேடம், இந்திர தநுசு ஆகிய இவைகளே.

13 நக்ஷத்திரங்களில் வர்ஷதாதுக்கள் தோன்றின் திருவாதிரைமுதல் 13 நக்ஷத்திரங்கள் வரை மழையுண்டு. அஃதாவது மூலத்தில் இரவி யிருக்கையில் கர்ப்போட்டமிருந்தால், திருவாதிரையில் வரும்போது மழையுண்டு. பூராடத்தில் இரவியிருக்கும்போது கர்ப்போட்டமிருந் தால் புநர்பூசத்திற்கு அவர் வரும்போது மழையுண்டு. மற்றவைகட்கு மிவ்வகையே கொள்க.

இரவி மேடத்தில் வரும்போது அசுவதியில் மழை பெய்தால், மூலத்தில் அவர் வரும்போது மழையுண்டு. கர்ப்போட்டங் கெட்டு இரவி திருவாதிரையில் வரும்போது மழையில்லை.

சித்திரை மாதத்தில் மிருகசிரிடத்தில் மழை பெய்யின், அவிட் டத்தில் இரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டு இரவி மகத்தில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ உரோகிணியில் மழைபெய்தால், உத்திராடத்தில் சூரியன் வரும்போது மழையுண்டு. கர்ப்போட்டங்கெட்டுப் பூசத்தில் சூரியன் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ திருவாதிரைநாளில் மழைபெய்யின், சதயத்திலிரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டு பூரத்தில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ பூரநாளில் மழைபெய்யின், ரேவதியில் இரவிவரும் போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டு மேடத்தில் வரின் மழையில்லை.

சித்திரைமீ பூசநாளில் மழைபெய்யின், அசுவதியில் இரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டுச் சுவாதியில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ ஆயில்யநாளில் மழைபெய்யின், இரவி பரணியில் வரும்போது மழையுண்டாம். கர்ப்போட்டங்கெட்டு விசாகத்திற்கு வரும்போது மழையில்லை.

சித்திரைமீ மகத்தில் மழைபெய்யின், இரவி கார்த்திகையில் வரும்போது மழையுண்டாம். கர்ப்போட்டங்கெட்டு அநுடத்தில்

வரும்போது மழையில்லை. இவைகளைச் செவ்வையாபாராய்ந்து மழை சொல்க.

ஜேஷ்டமீ சுக்கிலபக்ஷத்தில் திருவாதிரை முதல் 10 நக்ஷத்திரங்கள் வரை எந்தெந்த நக்ஷத்திரங்களில் மழைபெய்யுமோ அந்தந்த நக்ஷத்திரங்களில் சூரியன்வரின் மழையில்லை. திருவாதிரை முதல் 10 நக்ஷத்திரங்களில் எந்தெந்த நக்ஷத்திரங்களில் மழைபெய்யவில்லையோ அந்தந்த நக்ஷத்திரங்களில் இரவி வரும்போது மழை பெய்யும்.

மார்க்கசிர சுத்த பிரதமை முதல் பௌர்ணமிவரை கர்ப்போட்ட மோடினல், ஜேஷ்டமீ கிருஷ்ணபக்ஷத்தில் மழையுண்டு.

மார்க்கசிரமீ சதுர்த்தசியில் மகம் வந்து மின்னல் மின்னினல் ஆஷாட மாதத்தில் நன்மழையுண்டு.

மார்க்கசிர சுத்த சதுர்த்தசி பகலில் மழை பெய்தால் வருஷகால இராத்திரியில் நல்ல மழை பொழியும். இரவில் மழை பெய்தால் வருஷகாலத்திற் பகலில்மழையாம். [வருஷகாலமென்பன:—ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை யாகிய நான்கு மாதங்கள்.]

மார்க்கசிரமீ பௌர்ணமி யிரவில் மப்பு மழையுமின்றி ஆகாயம் சுத்தமாயும் சந்திரன் பிரகாசமாயுமிருந்து தெற்கேயாவது வடக்கேயாவது மின்னல் தோன்றினல், மழைக்காலத்தில் துர்ப்பிட்சமும் உற்பாதமு முண்டாம்.

புஷ்ய சுத்ததின பௌர்ணமியில் உரோகிணி நக்ஷத்திரம் வந்து அன்றைக்குக் கர்ப்போட்டம் ஓடினல், கடகரவியில் மழை பொழியும்.

புஷ்யமீ பௌர்ணமி யிரவில் பனியோடு தசதாதுக்களும் நான்கு யாமத்துமிருந்தால், ஆவணிமீ முதல் கார்த்திகைமீ வரை மழையுண்டு. முதல்யாமத்திற் காணின் ஆவணியிலும், இரண்டாம் யாமத்திற் புரட்டாசியிலும், மூன்றும் யாமத்தில் ஐப்பசியிலும், நான்காம் யாமத்திற் கார்த்திகையிலும் மழையுண்டென்றறியலாம். மேற்கூறப்பட்ட அவ்வவ் யாமங்களில் தசதாதுக்களும் பனியும் இலதேல் கூறிய இந்நான்கு மாதங்களிலும் மழையே யில்லை.

புஷ்யமீ˝ பௌர்ணமி யிரவில் வருஷதாதுக்களுக்குரிய ஆதாரங் கள் இலவேல் ஒரு மண்பாத்திரத்தில் இலவம்பஞ்சினை யிட்டு வீட்டுக் கூரையின்மேல் ஒருயாமப்பனியில் வைத்தெடுத்துப் பின்னர்ப் பிழிந் தெடுக்கச் சிறிததிகமாக நீர்வரின் ஆவணியில் நன்மழையுண்டென் றும், கசிந்து, துளித்துளியாக விழின் அம்மாதத்தில் அற்ப மழை யுண்டென்றும், சலமே வராதொழிந்தால் ஆவணிமீ˝த்தில் மழையே யில்லை யென்றுமறியலாம். இவ்விதமே யிரண்டாம் யாமத்திட்டறிந்து புரட்டாசியில் மழையுண் டல்லதில்லை யென்றும், மூன்றும் நான்காம் யாமங்களிலுமறிந்து ஐப்பசி கார்த்திகை மாதங்களில் மழையுண் டல்ல தில்லை யென்றுமறிக. பிரதிமாஸ மொன்றொன்றற்கும் பிரத்தியேக மாகக் காற் காற் பலம் இலவம்பஞ்சு வைத்துப்பார்க்கவேண்டும். முதல் யாமத்து வைத்திட்டறிந்த பஞ்சினை மற்ற யாமங்களில் உபயோகப் படுத்தலாகாது.

புஷ்யமாதகிருஷ்ணபக்ஷத்தில் மூலநக்ஷத்திரம் முதல் அமாவா சியை வரை கீழ்காற்றடித்தால், ஆவணி முதல் நான்கு மாதங்கள் வரை நன் மழையுண்டு.

மார்கசுத்தப் பிரதமை அஷ்டமி துவாதசி பருவசந்திகளில் பனி யுங் காற்றும் இருப்பின், ஜேஷ்ட மாதத்தில் நன் மழையுண்டு.

மாகமீ˝ விசாகம் ஆயிலியம் பூராடம் சுவாதி சதயம் மூலம் இந்நக்ஷத்திரங்களில் அதிகப்பனியேனும் காற்றேனுமிருப்பின், பாத் திரபத மாசத்தில் நன்மழையுண்டு.

மாகமீ˝ பௌர்ணமி மகநக்ஷத்திரத்தில் மழைபெய்தால், வருஷ காலமாம் நான்குமாதங்களிலும் சமுத்திரதீர தேசங்களில் நன்மழை பொழிந்து சுபிக்ஷமுண்டாகும்.

மாகசுத்த சப்தமியில் சந்திரனுக்குப் பரிவேட மிட்டிருக்கக் காணின் சிராவணமீ˝ சப்தமியில் பிசகாது நன்மழையுண்டென்ன லாம்.

பால்குனமீ˝ கார்த்திகைமுதல் மூலம் வரை மகம் பூரம் சுவாதி பூராடம் இந்த நக்ஷத்திரங்களில் தச தாதுக்கள் தோன்றின், அந்த மாதம் கர்ப்பமுண்டு.

பால்குனசுத்தத்தில் உரோகிணி நாளன்று சந்திரனைப்பரிவேட மிட்டிருந்தால், நன்மழையேனுந் தேசத்திற் கலகமேனுமுண்டு.

பால்குனமீ சித்திரை நக்ஷத்திரத்தினம் காற்றும் மழையுங் கலந்திருந்தால், சூரியன் சித்திரையிற் பிரவேசமாம்போது நன்மழை யும் பயிர்விருத்தியு முண்டு.

சைத்ர சுத்த ஏகாதசிமுதல் நான்கு நாள் மழைபெய்தால் ஆவணி முதல் நான்கு மாதங்கள்வரை மழை கிடையாது.

சைத்ரசுத்த துவாதசி சதுர்த்தசி இந்தநாட்களில் மத்தியானம் வானவில் போட்டிருக்கக் கண்டால், வருஷகாலங்களில் மழையுண் டென்றும், இரவில் அவ்விதங்காணப்பெறின் துர்ப்பிட்ச முண்டெ ன்று மறிக.

வைசாகபௌர்ணமியன்று கீழ்த்திசையில் மேகஞ்சூழ்ந்து எவ் வளவு தூரம் மழைபெய்யுமோ அவ்வளவுதூரம் வரை வருஷ காலங் களில் நன்மழை பெய்து பயிர் பலிதமாகும்.

வைசாக சுத்த பிரதமை முதல் சதுர்த்தி வரை எந்நாளிலாவது மழை இடி காற்று இவை யிருந்தால், மாரிக்காலத்தில் நன்மழை யுண்டு. மழையின்றி மப்பு மாத்திரமிருந்தால், மழைக்காலத்தில் மழையில்லை. மப்பிருந்து மழையும் பொழிந்தால், வருஷகாலததில் மழையும் பயிர்பலிதமு முண்டு.

வைசாக கிருஷ்ண பஞ்சமியில் வடக்கேயுங் கிழக்கேயும் மேக சஞ்சாரமிருந்தால், வருஷகாலத்தில் நல்லமழை பெய்து பயிர் பலிக் கும். அற்றைத்தினம் மின்னல் மின்னினல், மத்திமப் பயிர் சொற்ப மாய்ப் பலிக்கும். ஆகையால் அற்றைத்தினம் அவசியம்பரீக்ஷித்தல் வேண்டும்.

வைசாக மாத உரோகிணியில் சூரியசந்திரர் கூடியிருக்கிற கால த்து மழைபெய்தால், வருஷகாலங்களில்நன்மழையுண்டு.

இடப பிரதம நவாம்சத்தில் சூரிய சந்திரரும் சிங்க பிரதம நவாம்சத்தில் குருசந்திரருங்கூடிய காலத்து மழை பெய்தால், அது முதல்மழைகால விறுதிவரை நன்மழையுண்டு.

வைசாக அமாவாசியையன்று மத்தியான சாயந்திரங்களில் மேகசஞ்சாரமிருந்தால், மழைகாலத்தில்நன்மழைபொழிந்து மூன்று பங்கு பயிர் பலிதமாகும்.

இடபத்தில் சூரியனிருக்கையில் சந்திரனுஞ் செவ்வாயும், அல்லது செவ்வாயும்புதனும் மேடத்திலாவது மிதுனத்திலாவது இருப்பின், அவ்வருஷத்திற் சொற்ப மழையுண்டு.

மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம் இந்நக்ஷத்திரங்களில் சூரியன் சஞ்சரிக்குங்காலத்து அதற்கு ஆறுவது நக்ஷத்திரங்களாகிய மகம் பூரம் உத்திர மிவைகளில் (சந்திரன் வரும்போது) மழை பெய்தால், அந்த வருஷத்தில் நல்ல மழையுண்டு.

மேற்சொன்ன மூன்று நக்ஷத்திரங்களில் இரவி வரும்போது அந்தந்த நக்ஷத்திரங்கட்கு ஒன்பதாவது நக்ஷத்திரத்தில் மழை பெய்தால், அவ்வாண்டில் மழையில்லை.

ஜேஷ்டமாதத்தில் நிருதிக்காற்றோடு மேற்றிசையில் வானவில் விட்டிருந்தால், அது முதல் பங்குனிமீ௳ வரை மழையில்லை. அல்லது விற்காணப்பட்டதுமுதல் இரண்டு மாதம் வரைக்குமாவது மழையில்லாமலிருக்கும்.

ஜேஷ்டமாதத்தில் சித்திரை அநுஷம் கேட்டை இந்நக்ஷத்திரங்களுக்குத் * தெற்கிற் சூரியன் சஞ்சரித்தால் அதுமுதல் ஆறுமாதம் வரை மழையில்லை.

ஜேஷ்ட சுக்கில அஷ்டமியில் மழைபெய்திடியிடித்தால், வின் மழை பெய்யுந்தூரம் வரையும், இடியின் ஒலி கேட்குந்தூரம் வரையும், மழைக் காலத்தில் நல்ல மழைபெய்து பயிர்விருத்தியாகும்.

ஜேஷ்ட சுக்கிலபக்ஷ சித்திரை சுவாதி விசாகம் இந்நாட்களில் ஆகாயத்தில் மேகமில்லாது சுத்தமாயிருந்தால் சிராவண மாதத்தில் நல்ல மழையுண்டு.

---

* நன்கு விளங்காததாற் பின்னராராய்ந்தெழுதப்பெறும்.

ஜேஷ்ட சுக்கில துவாதசி முதல் நான்கு நாள்வரை ஆகாயத்தே மப்பில்லாமல் நிர்மலமாயிருந்து மழைத்துளிகள் பூமியில் விழுந்தாலும், சாயந்திரம் கிழக்கிலும் வடக்கிலுங் காற்றோடு மேகசஞ்சாரமாயிருந்தாலும், மழைக் காலங்களாகிய நான்கு மாதங்களிலும் மழை பொழிந்து பயிர் விருத்தியாகும். அவ்வாறிலதேல் மழையில்லை. துவாதசியிலவ்வாறிருப்பின் ஆவணியில் மழை யென்றும், திரயோதசியில் காணப்பெறின் புரட்டாசியில் மழையென்றுமறிக. மற்றவைகட்கு மிவ்வாறே கொள்க.

ஜேஷ்டமீ அசுவனி முதல் ஐந்து நக்ஷத்திரங்கள் வரை மழை பெய்தால் அந்த ஸம்வத்ஸரத்தில் ஐந்து * துரோண மழையுண்டு.

பூராடம் உத்தராடம் திருவோணம் பூரட்டாதி இந்த நாட்களில் மழை பெய்தால் அந்த வருடத்தில் ஏழு துரோண மழை யுண்டு.

அநுஷம் மூலம் உத்திரட்டாதி ரேவதி இந்த நாட்களில் ஒவ்வொரு நாளிலும் மழை பெய்தால், ஒவ்வொரு துரோண மழைஅதிகமுண்டெனக் கொள்க. அனுஷத்திற் பெய்தால், அவ்வாண்டிலொரு துரோண மழை யென்றும், அனுஷ மூல மிவ்விரண்டு நாட்களிலும் பொழிந்தால், இரண்டு துரோண மழை யெனவு மறிக. மற்றவைக்கு மிவ்வகையே கொள்க.

அவிட்டம் சதயம் விசாகம் கேட்டை இந்த நக்ஷத்திரங்களில் மழை பெய்தால் முறையே 8, 6, 2, 14 துரோணவிருஷ்டி யவ்வாண்டிலுண்டு. (தொடரும்.)

தரங்கம்பாடி

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

சகோதரன்

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை.

---

* வாய்ப்புறம் மூன்றங்குலச் சுற்றளவுடையதும் நான்கு மரக்கால் ஜலம் நிரம்பக்கூடியதுமான ஒரு மட்பானைநிரம்பப் பெய்யுமழைச்சலத்தைத் துரோணமென்ப.

555

ஸ்ரீ:

பாண்டிய சாசநம்.

IV.

திருநகரி ஞானப்பிரான்-வடக்குவாசலுக்கு மேலைப்பத்தி.

'கோமாற வாமண சுநதரபாணடியனின ௰௧-வது வருஷம.'

அகவல்

(1) ஸ்வஸ்திஸ்ரீ

பூமலற திருவும பொருசைய மடநதையும
தாமரைக குவிமுலை ஜயபபுயத திருபப
(2) வேத நாவில வெளளிதட டாமரை
காதன மாது கவினபெற திளைபப
வெணடிரை யுடுதத ம (3) ணடிணி கிடக (ை) கத
திருநில மடநதை யுரிமையிற களிபபச
சமையமு நீதியுந தருமமுந தழைபப
(4) இமையவா விழாககொடி இடநதொறு மெடுபப
கருஙகலி கனலகெடக கடவுள வேதியா
அருநதெ (5) தாழில வேழவிச செஙகனல வளறபச
சுரிதியுந தமிழுந தொலவளங குலவப
பொருதிற லாழி பூத (6) லஞ சூழவர
ஒரு கை யிருசெவி மு (ம) மத ஹறகோட
டயிரா பதமுதல செயிாதீா கொறறத
தெணடிசை யானை யெ (7) ருதத மேறிக
கணடனா டெமதென கயலகளி கூர
கோசலந துளுவங குகிரங குசசரம
போசல மகதம பொபபளம புணடரங
(8) கலிஙக மீழங கடாரங கௌடம
தெலிஙகஞ சோனகஞ சீன முதலா

விதிமுறை திகழவெவ வேறு வகு (9) தத
முதுநிலக கிழமையின முடிபுனை வேநதற
கொருதனி நாயக னென்றுல கேதத
திருமுடி சூடி செஙகோ லோசசி
.கொறறத (10) தரளக குளிாகுடை நிழறற
கறறைக கவரி காவலா வீச
விடுகதிா நவமணி வீரஸிம்ஹாஸநத
துண (?) முடி சூடிஉயா (11) குலத திருவென
மஙகையா மலாறகரங குவிததுப பாததிவா
மஙகையா திரணடு வணஙகுஞ செனனி
சுடரொளி மௌ (12) லி சுடாமணி (மேவிட)
சிவநத விணைமலா(ச) சீறடி மதுகாங
கமல மெனற ணுகும உலகமுழு துடை
யாரொடுமவீறறி (13) ருநதருளிய
மாமுதல மதிககுலம விளககிய கோமுதற
கோமார பனமரான திரிபுவன சககரவாததிகள

ஸ்ரீ சுநதரபாண (14) டிய தெவறகககு (யாணடு) பதிஞனைருவது நாள நானூறறு அமபததுநாவினல மாடககுளக கீழமதுரைக கோயிறபளளியறைககூடதது (15) பபளளிபபீட மழவராயனில எழுநதருளியிருநது திருவழுதிவளநாடடு திருககுருகூா பொலிஞசுநினறருளிய ப(16) ரமஸவாமிகள கோயில திருபபதி சீவைஷணவா செய்ய திருவாய மொழிநதருளினபடி இப பரமஸவாமிகளுககு வடதலைச செம (17) பி நாடடுக கிழைககோடுமளூரான (மதுரோதயநலலூா) அரையன திருநாடுடையானுன நீலகஙகரையன பேரால அரையன பூவனுன வேணவு (?). (18) டையான கணட திருநாடுடையான சநதிககும இவ வேணுவுடையான (19) பிறநத உததரடடாதிநாள தீறதம வுஹாதிபபதாகக கணட சிததிரைததிருநாள பதினைஞசுககும திருபபடிமாறறுளளிடடு (20) வேணடு நிமநதஙகளுககும திருநாளபடிககும பெருங்குளமான உததமபாணடியநலலூரில இப பரமஸவாமிகளுககு (21) தேவதான இறையிலியாய இவ வேணுவுடையான நிலம அஞசு வேலியில திருவெளளறை நினற வாதிபபிரான

வணடு (22) வரைபபெருமாளான சுநதரபாணடிய ஸு ஹூரதராயனுககு
இவ வேணுவுடையா் காராணமை தனமதானமாகக குடுததநிலம
ஆரை (23) யு நீககி நிலம நாலரையும முனனுடையாரைத தவிாதது
பதினோராவதினெதிரா மாணடுமுதல கார (ா) ணமை மியாசசி தேவ
தானமா (24) க இடப பெற வெணு (மெனறு) ஐயயன மழவராயன
நமககுச சொனனமையில இப பொலிஞசுநினறருளிய பரமஸ்வாமி
களுககு (25) வடதலைச செமபிநாடடு கீழைககோடுமளூரா்ன மது
ரோதயநலலூா அரையன திருநாடுடையானான நிலகஙகரையன பேரா
(26)-ல அரையன பூபனான வேணுவுடையான கணட திருநாடுடை
யான சநதிககும திருபபடிமாறறுளளிடடு வேணடு நிமநதஙகளுககு
(27)-ம வேணுவுடையான பிறநத உததிரடடாதிநாள தீாததமஸு வா
ஜீபபதாக கணட சிததிரைததிருநாளயருககும திருபபடிமாறறுள
ளிடடு வேண (28)-டும நிமநதஙகளுககும திருநாளபடிககும பெருங
குளமான உததமபாணடிய நலலூாில இப பரமஸவாமிகளுககு தேவ
தானம (29) இறையிலியாய இவவேணுவுடையான காணியான நிலம
அஞசுவேலியில திருவெளளரைநினற வாதிபபிரான வணடுவரைப
பெருமாளான சு (30) னதரபாணடிய ஸு ஹூஈயராயனுககு இவ
வேணுவுடையாா காராணமை தனமதானமாக குடுததநிலம அரையும
நீககி நீககி நிலம நால (31) ரையும முனனுடையாரைததவிறதது
இவ வாணடுமுதல காராணமை மியாசசி தேவதானமாக இடடு வரி
யிலா ரெழுததிடட ஊ (32) வரியும நம ஓலையுநதரசசொனனோம
கைககொணடு இபபடி சநதிராதிததவற செலவதாகக கலலிலும
செமபிலும வெடடுவிததுகொள (33) கவெனறு திருவாயமொழிந
தருளினா இவை திருமலைவிநாடடு தடஙகணணி சிறறாருடை
யான..............................சோமதேவனு (34) ன குருகுலத
தரையன எழுதது இவை சேவிருக (ை) க நாடடு சககரபாணிநல
லூ (ா) அரையன விரதமுடிததானான பலலவராயன எழுதது.

ஸ்ரீரங்கம்.
6—2—12.

ஆழ்வார்திருநகரி,
A. சடகோபராமாநுஜாசார்யன்

வானசாஸ்திரம்.

(சகடு-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதமாகப் பூமிக்குப் பலவிதமானங்களுண்டெனக் காட்டப்பட்டன. இந்தியராகிய நமக்குச் சாந்திரம், பார்ஹஸ்பத்தியம், சௌரம், சாவன மெனப் பலவித மானங்களிருக்கின்றன. இவைபோலவே, ஐரோப்பியருக்கும் அயனவாண்டு (Tropical) நக்ஷத்திரவாண்டு (Siderial) மந்தவாண்டு (Anomalistic) சாவனம் (civil) எனப் பலவித மானங்களேற்பட்டிருக்கின்றன. வானசாஸ்திரத்திற்குப் பிரயோஜனமாக விருப்பது நக்ஷத்திரமானந்தான். அயனவாண்டென்பது நக்ஷத்திரமான வருடத்திற்குச் சற்றேறக்குறைய 11-நிமிஷம் குறைவானது; மந்தவாண்டு $4\frac{1}{2}$ நிமிஷம் அதிகமானது. அயனவாண்டு குறைவாயிருப்பதற்குக் காரணமென்னவெனில், இராசிமண்டலத்திலுள்ள மேஷராசியானது வரவர வக்கிரகதியுடையதாய் ஆண்டொன்றிற்கு 50·22 விகலை வீதம் பின்னே செல்லுகின்றதெனக் கணிக்கின்றனர். மேஷராசி எப்பொழுதும் அச்சுவினி நக்ஷத்திரத்தின் முதற்பாதத்திலிருப்பதாக ஏற்பட்டிருப்பினும், இப்பொழுது ரேவதி நக்ஷத்திரத்திலிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதெனச் சோதிடகணிதம் என்றவிஷய முகவுரையிற் குறித்துள்ளேன். சூரியன் ஒருதரம் சுற்றி மறுபடி மேஷராசிக்குவர 360 நாளுக்கு இந்த வக்கிரத்தாலேற்பட்ட 50·22 விகலைபோகப் பாக்கியுள்ளதாகும். இந்த ராசிமண்டலப் பிற்போக்கு அல்லது வக்கிரகதிக்கு அயனசலன மெனப்பெயர். இந்த வக்கிர முண்டாவது இராசிமண்டலம் அசைவற்றிருக்க நமது பூமியின்சாய்வு வரவர மாறி வருகிறதாலாம். அநேக காலங்கள் சென்றபிறகு அதாவது $\frac{360\times60\times60}{50\cdot22}$ = ஏறக்குறைய 25800 வருடங்கள் சென்றபிறகு, மேஷவிராசி அதேயிடத்திற்குத் திரும்பும். இதற்குத்தான் அயனவாண்டெனப் பெயர்தந்தனர். மந்தவாண்டென்பது சூரியன் சீக்கிரோச்சத்திற் காணப்படுங்

காலமாம். பூமியானது டிசம்பர்மீ 31உயில் சூரியனுக்குச் சமீபமாயும், ஜூலைமீ 1உயில் தூரமாயுமிருப்பதாய் முன்னர்க் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டிடங்களையும் சேர்க்கும் கோட்டிற்கு மந்தரேகை (apse line) எனப்பெயர். இதனில் ஒரு சுற்று வருங் காலம் மந்தவாண்டாம். சாவனவாண்டென்பது இன்னதெனக் குறிக்கப்பட்டிருக்கின்றதாயினும், நம்மவர் அநேககாலத்திற்கு முன்னேயே இவ்வளவுதானென நிர்த்தாரணம் செய்திருக்க, ஐரோப்பியருக்கு அவ்வாறின்றி, பலதிறப்பட்டு இப்பொழுதுதான் சீர்திருத்தப்பட்டிருக்கின்றது. முதலில் அவர்கள் அயனவாண்டைக் கைக்கொண்டனர். அயனவாண்டின்காலம் 365-நாள் 5மணி 48நிமிஷம் 45·51 சகண்டாகையால் அதன் பகுதிகளைத் தள்ளி 365 நாளைக்கொண்டனர். இவ்விதமாகச் செய்வதால் 4-வருஷத்திற் சற்றேறக்குறைய ஒரு நாள் (சரியாக 23மணி 15 நிமிஷம் 2.04 சகண்டு) வித்தியாசமுண்டாயினமையின், உரோமகபட்டினத்தை மகா கீர்த்தியுடனாண்ட ஜூலியஸ்கீசர் என்பவர் நான்கு வருடத்திற்கு ஒரு நாள் சேர்க்கும்படி செய்தனர். அப்படிச் சேர்த்தும் 400 வருடங்களில் 3 நாட்கட்கதிகமாக ஏறியபடியால் இதனையறிந்த உரோமகபட்டினத்தில் வசிக்கும் விவிலியமதப் பிரதமபீடாதிபதியான பதின்மூன்றாவது கிரிகரி என்பார் 100-ல் பாகிக்கக்கூடிய வருடங்களை 365 நாட்களுடையனவாகவும், நான்கினால் வகுக்கக்கூடிய வருஷங்களை 366-நாட்களுடையனவாகவும் ஏற்படுத்தினர். இதற்குக் கிரிகரி பஞ்சாங்கம் எனப் பெயர்வந்தது. அவ்விதமேற்படினும் 2மணி 56 நிமிஷம் 36 சகண்டு அதிகமாகவேயேற்படுகிறது. சாந்திரமானமும் (Synodic) அவர்கட் கேற்பட்டதாயினும் அது பிரயோஜனப்படவில்லை.

முன்னர்ச் சூரியசித்தாந்தத்தில் தேவதைகள் வடபுலத்துள்ள 6 இராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்கும்போது சூரியனை இடைவிடாது காண்கின்றனர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நியாயமென்னவெனில் மத்தியரேகை அல்லது நிரக்ஷரேகையில் மேஷாயனத்தின்போது சூரியன் செல்லுங்கால் 180 பாகையிற் செல்லுவதால் இரவு பகல் சமமாகவே யிருக்கிறது. மார்ச்சுமீ 21உ முதல் செப்டம்பர் 23உ வரை பூமியின் நிரக்ஷரேகைக்குப் புறம்பாய் ஆகாயவீதி

யோடுகிறது. அதனால் வரவரப் பகலிரவு வித்தியாசமுண்டாகிறது. அதுபோல் வடபுலம் 66 பாகை 37 கலையிலிருப்பதால் மார்ச்சுமீ 21உயிலிருந்து அக்ஷாம்சத்திற்குத் தக்கபடி சூரியனது சாய்வுண்டாகப் பகல் விருத்தியாகி ஜூன்மீ 21உ யோடு முடிவடைகிறது. வடதுருவத்திலோ காணுங் காட்சி வெகு லகுவானது. ஆகாயவீதி (celestial equator) அநுமான வானத்தோடு காணப்படும். ஆனது பற்றி மார்ச்சுமீ 21உ முதல் செப்டம்பர்மீ 23உ வரை அதாவது மேஷாயனமுதல் துலாயனம் வரையிற் சூரியன் அநுமான வானத்திற்கு மேலிருப்பதாற் சதாகாலமும் ஆதித்தனொளி வீசுகிறது. பின் ஆறு மாதமும் அநுமான வானத்திற்குக்கீழ்ச் செல்லுவதால் எப்பொழுதும் இருள் சூழ்கிறது. இது ஐரோப்பிய வானகணித சாஸ்திர சம்மதமுமாகும்.

முன்னர்ப் பூமி சுற்றுவது சித்தாந்தமென்று கூறப்பட்டதேயொழிய, அதன் காரணங்களிவையென்றும் அதற்குற்றதோற்றங்கள் சாக்ஷியங்க ளிவைகளாகுமென்றும் கூறப்படவில்லை.

தேசமெங்கும் சூரியன் கிழக்கினின்றும் மேற்கிற் செல்லுவதைக் கண்ணுறுவதால், பூமியும் ஒரு கிரகம் போன்று அந்தரத்தில் நிற்பதாயினும், சூரியனே இதனைச்சுற்றியோடுகிறதென்பது பூர்வீகர்களில் ஐரோப்பியர்களுக்கும் இந்துக்களுக்கும் ஒத்த கொள்கையாக விருந்தது. இந்த எண்ணத்தை முதன்முதற் றாக்கியவர் சற்றேறக்குறைய கி. பி. 1500வதில் இருந்தவராக ஊகிக்கப்படுகிற கோபர்நிகஸ் என்னும் வான சாஸ்திரியேயாம். இதனைப் பின்பற்றிப் பலசித்தாந்தங்களை யேற்படுத்திக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்தவர் சற்றேறக்குறைய கி. பி. 1609 ல் இருந்தவராகக் கொள்ளப்படும் கெப்ளர் (Kepler) என்னும் சாஸ்திரக்ஞர். ஆனால் இதனை முற்றுப்பெறும்படி செய்தவரோ நியூடன் (A. D. 1687) என்னும் தத்துவசாஸ்திரியேயாம். ஐரோப்பிய நாடுகளில், ஆகர்ஷண சக்தி யொன்றிருக்கிறது; அதன் சக்தியாலேயே யாவும் பூமியைப்பற்றி நிற்கின்றன; என்று முதன்முதற் காட்டியவர் இம்மகானே. சலனசாஸ்திர விதியின்றிக் கண்கூடாகக் காணும் விஷயங்கள் யாவை யெனின்:—

I. பூமி ஸ்திரமாயும் சூரியன் நக்ஷத்திரமண்டலங்கள் சஞ்சரிப்பதாயும் கொண்டால் அதற்குற்ற கதிகளோடு சலிக்கவேண்டும். பூமி

யின் சலனகதி மணி ஒன்றுக்கு 1050 மைலெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரமோ பூமியினது அர்த்த விட்டத்தை விட 24000 பங்கு என்றும், சூரியன் பூமியை விட 110 மடங்கு பெரிதென்றும் சொல்லியிருக்கிறோம். ஆகையாற் சூரியன் சுற்றுவதானால் 24000 மடங்கு அதிகமாக அல்லது மணி ஒன்றுக்கு 25000000 மைல்வீதமன்றோ செல்லும். இதுவன்றி நக்ஷத்திரமண்டலங்கள் இன்னும் அதிக தூரத்திலிருப்பதால் இன்னும் அதிகவேகமாகச் செல்லவேண்டும். அப்படி யொன்றும் புலப்படவில்லை.

II. பூமி பூமத்திய நிலையில் ஒருவிதமானமாறுபாடுமின்றி நாளுக்குநாள் தன்னைத் தானே பிரமணஞ் செய்கிறது. அவ்விதமின்றிப் பூமி நிலைவரமென்றால், சூரியன், சந்திரன் தாராகணங்களெல்லாம் இதனோடு அண்மையிற் சம்பந்தமுடையவாக விருக்கவேண்டும். அப்பொழுது அவைகளெல்லாம் ஒரே படியாகச்சுற்றவேண்டுமேயன்றிப் பலவிதமாகச் சுற்ற வியலாது.

III. ஆதித்த வடுக்களை யுற்றுநோக்கும்போது ஆதித்தன் தன்னைத்தானே பிரமணஞ்செய்வதாகத் தெரிகிறது. அதுபோன்று எல்லாக் கிரகங்களும் பிரமணஞ்செய்கின்றன. இந்த நியாயத்தைக் கொண்டு பூமியும் ஏன் பிரமணிக்கக்கூடாதென்பது.

IV. பூமியானது தினமானம் நிலைமாறித்தோன்றும் காட்சியே போதியதாகும். அப்படி யில்லையாயின் ஸ்தானபேதம் முதலியவை வெகுலெகுவாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

இனிச் சலன விதிகளின் சாக்ஷியங்களெவை யெனின்:—

(1) உயரவிருந்து கீழேவிழுபவைகள் கிழக்கே தள்ளி விழுதல்.

(2) பூகோளத்தின் பெண்டுலப் பரிக்ஷை.

(3) ஜிராஸ்கோப் பரிக்ஷை.

(4) பாய்தற் பரிக்ஷை.

(5) சமுத்திரக்காற்று முதலியவற்றின் பரிக்ஷை.

(6) பல அக்ஷாம்சங்களில் ஆகர்ஷணசக்தி.

(7) பூமியின்வடிவ சோதனை.

இவைகளில் இரண்டை மாத்திரம் பற்றிச்சொல்லுவோம். பூமியானது பூமத்தியத்தை யொட்டிப்பிரமணம்செய்வதால் அப்பாகத்தை விட அதற்குத் தூரமாயுள்ள பாகங்க ளின்னும் வேகமாகச் சுழலு மன்றோ. அதுகொண்டு கோபுரங்கள் போன்ற உன்னத சிகரங்களில் அடியைவிட நுனி (அதாவது தலை) கொஞ்சம் வேகமாகச்செல்லும். உதாரணமாக ஒரு கோபுரத்தின் நுனியிலிருந்து ஒரு கல்லைக் கீழே போடுவோமாயின், அது நேரே விழவேண்டியவிடத்தைவிட்டுச் சற்றுக் கீழ்புறமாய் விழும். அதுபோலவே ஒரு சுரங்கத்தின் கீழ்விடப்பட்ட வஸ்துவும் கிழக்கேதான் செல்லுகிறது. இவை யற்பமே யாயினும் பிரமணம் செய்கிற தென்பதற்குப் போதிய சாக்ஷியாமென்பதோடு பிரமணமும் மேற்கிலிருந்து கிழக்கேயா மென்பது போதரும். பீரங்கி வாயினின்று புறப்படும் ஒரு வெடிகுண்டானது நேரே செல்லாது சற்றுச் சாய்வாகப் போய்க் குறியிற் படுவதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இவைபோன்ற காரணங்களாற் பூமி சுழலுகின்றதென்பது நிதர்சனம்.

சந்திரன்.

ஆடவர், பெண்டிர், பாலர், முதலிய சகல வகுப்பாருக்கும் ஆநந்தத்தைத் தருவதும், கவிவாணர் கவிசிறக்குமாறு பலவாருக உவமிக்கப் பெறுவதும், சிங்காரவருணனையிற் சிறந்து விளங்குவதும் சந்திரனன்றோ. ஒருக்காற் பிறர் பொருளைக் கவர்வாருக் கநுகூலமாயிருக்கும் நள்ளிருளைக்கொடுப்பதும், யாதொருபயமின்றி யெங்குங் கூசாமற் செல்லும்படிக்கு இனிய காக்ஷிகளையுந் தோற்றங்களையு முண்டாக்குவது மிச்சோமனன்றோ. தானே ஒருநாட்கொருநாள் குறைந்தும் அக்காலத்து வானத்திலுள்ள தாராகணங்களை யொன்றுவிடாது வெறுங்கண்ணுக்குப் புலப்படும்படியாயும், ஜாலவித்தைக்காரன்தான் மூடியமரக்கொட்டையினின்று மாம்பழம் தருவித்துச் சபையோரை மகிழ்விப்பதுபோல், உலகமாகிய அரங்கினில் திடீரெனக்கிளம்பி, மிக்க

சோதியையுடைய இரண்டொரு வான்மீன்களைத்தவிர்த்து மற்றவை புலப்படாவண்ணம் தன்னுளடக்கியும், தன் குளிர்ந்தகிரணங்களை வீசி உலகத்தாரை மயக்கித் தன் வலையிற் சிக்குண்டு தடுமாறச்செய்வதும் இவ்விந்துவேயாம். இவ்வளவு சாமர்த்தியம் தன்னிடம் வாய்க்கப் பெற்றும், தான் இப் பூமியினிடம் அகப்பட்டுக்கொண்டு அதற்கு உபக்கிரகமாய்ச் சுற்றும் தலைவிதியைப்பெற்றதெனக் கேட்கப்பலர் ஆச்சரியப்படக்கூடும்.

கிரகங்களைச் சுற்றித்திரியும் உபக்கிரகங்களில் முதலாவதாக ஏற்படுவது சந்திரனே. முதலில் வெறுங்கண்ணுக்குப் புலப்படும் காக்ஷியைப்பற்றி விபவகரிப்போம். இருபத்தொன்பது அல்லது முப் பது நாட்களிற் சந்திரன் பலதிறப்படுவதை, அதாவது எப்படி வளர் கிறதோ அதுபோலவே குறைவதையுங் காண்கிறோம். இதனால் இச் சந்திரனுக்கு ஒன்றனைச்சுற்றியோடுதலும், தானேசுழலுதலும் இயற் கையி லமைந்ததெனப் பெறப்படுகிறது. ஒன்றனைச்சுற்றியோடுவ தாற் கலாவிருத்திக்ஷயங்களுண்டாகின்றனவென்றும், ஒரேபுறமாய்க் காண்பதால் மற்றொருபுறமிருப்பதை நாம் பார்க்கக்கூடாமல் தன்னைத் தானே சுற்றுகிறதென்றும், பரிவர்த்தனமும், பிரமணமும் ஏககாலத் தில் நடைபெறுவதுகொண்டு நமக்குவித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டசாத்தியமாகிறதென்றும் மேல்நாட்டு நிபுணர்கள் எழுதுகின் றனர்.

முதலிற் சந்திரனைக் கண்ணுறாதபோது இன்று அமாவாசை யென்றும், அப்பொழுது சந்திரன் ஆகாயத்திற் சூரியனுக்குச் சமீப மாய், சூரியப்பிரகாசத்தில் மறைந்துவிடுகிறதென்றும், அறிகிறோம். சந்திரனைக் கடைசியாகக்கண்ட நான்காம்நாள் நாம் மறுபடி சந்தி ரனைச் சிறுகீற்றாகக் காண்கிறோம். இதற்கும், நாம் முன்கண்ட காட்சிக்கும் மத்தியகாலத்திற்றான் அருக்கனொளியிற் சந்திரன் மறை கின்றான். நாம் சாதாரணமாக முதலிற்காணும் சந்திரனை மூன்றாம் பிறைச் சந்திரன் என்று சொல்லுகிறோம். அது அநுமானவானப் புறமாய்ப் புறக்குவிவுடையதாய்ப் புலப்படும். அதன்மேலுள்ள இலேசான் தோற்றம் பூமியின் ஒளியாற்றோன்றுவதா லதற்கு ஹஅப் பிரகாசம்(பூப்பிரகாசம் Lumiere Cendree லூமியேர்ஸாந்த்ரே)என

வழங்குவர். இவ்விதமாய் ஏழாம்நாளில் அர்த்தசக்கிராகாரமாய்த் தோற்றுவதுடன், சந்திரனிடமுள்ள வஸ்துக்கள் பலவும் களங்கமற்றுத் தோன்றும். மறுஏழுநாட் செல்வதற்குள் தினந்தினம் விருத்தியாகிவருகிறதுடன் பிரகாசமும் அதிகப்பட்டு மேற்புறத்தில் தனது புறக்கவிவுங்கொண்டுவருகிறது. கடைசியாக, நமக்கு அதன் ஆகிருதி முழுவதுந்தோன்ற, இது உச்சமடையும்போது, சூரியனும் அநுமானவானத்தின்கீழ் இதற்குநேரே நிற்கிறது. அன்றுமுதற் கலைக்குறைவும், கடைசியில் முன்றோன்றியபிறையு முண்டாயினும், இப்பொழுது புறக்குவிவு கீழ்ப்புறந்தோன்றும். (அதாவது ஒளிப்பர்கம் எக்காலத்தும் சூரியனையொட்டியே நிற்கும்.) இக்காட்சி வேறுபாடெல்லாம் பூமியைச்சுற்றிச் சந்திரன் ஓடுவதாலேயேயாம்.

பூமி மத்தியிலும் அதனைச்சுற்றிச் சந்திரனும் இருப்பதாக இரண்டு விருத்தங்கள் எழுதுவோம்; அதற்குவலப்புறத்தில் சூரியனிருக்கிறது. இரண்டு சக்கரங்களுக்கும் மத்தியாக வலவிடப்புறமொரு கோடும், மேல்கீழாக ஏழுகோடும் கிழித்து, இவைகளுக்கு மத்தியமாக நான்கு கோடுகள் கிழிக்க எட்டு இடங்களேற்படும். முறையே இவற்றிற்கு க, ங, ச, ஞ, ட, ண, த, ந வெனப் பெயர்தருக. வலப்புறம் சூரியனிருப்பதால் அந்தப்புறமான கவ்வில் சந்திரன் றோன்றும்போது, சந்திரனுடைய இருண்ட பக்கம் பூமியிற்றோன்றுகிறது. அதனை நாம் அமாவாசையென்கிறோம்.

ஙவ்வில் ஒளிப்படலத்தில் ஒருபாகந்தோன்றுகிறது. அப்பொழுது அதனைப் பிறை யென்கிறோம்.

சவ்வில் உச்சியிலிருப்பதால், சந்திரன் அப்பொழுது 90-பாகை சுற்றிவிடுகிறது; அதன் மேற்புறம் முழுவதும் பூமியிற்றோற்றுகிறது. திதியும் ஏழரையாகிறது. அப்பொழுது அதனை அர்த்தசக்கிராகாரமாகக் காண்கிறோம்.

ஞவ்வில் இன்னும் பிரகாசமாகிறது

டவ்வில் சந்திரன் எதிரில் அதாவது இடப்புறம் புலப்படுகிறான். அப்பொழுது அவனது ஒளி பூமிமுழுவதும் பிர

காசமாய்ப் பிரதிபலிக்கிறது. அதுதான் பூர்ணிமை. அப்பொழுது சந்திரனுக்கு வயது 15-நாட்கள்.

ணவ்வில் ஏவ்விலிருப்பதுபோல் மேற்புறம் கறுப்பாயிருக்கும்.

தவ்வில் சந்திரன் 270-பாகை விலகுவதால் அர்த்தசந்திரனாகிறது.

ஙவ்வில் ஙவ்விலிருப்பதுபோற் பிறையாகிறது.

சந்திரனில் ஒருபாகம் தெரிவது ஆகாயத்திற் றோற்றும்போது ஒரு பெரிய பிறைபோற் றோற்றுமென்னும் கணிதநூன் முறைப்படி, சந்திரன் நகர நகர விருத்தியாகிறதென்பதாம்.

பிறையின் கோடுகள் சில காலங்களில் வடபுறத்தும், சில சமயம் தென்புறத்தும் சாய்ந்திருக்கக்காண்கிறோம். நமக்குச் சந்திரனுடைய கலாவிருத்தி தெரியுமானால் சூரியனினின்றும் அதனுடைய் தூரம் இவ்வளவென்றும் தெரியும். அது தெரியக்கூடுமானால் அதனுடைய கலை இவ்வளவிருக்குமென்று சொல்லக்கூடும். ஒளிப்பாகம் சூரியன்பக்கற்றோன்றுமென்பது தெளிவாகையின், அதன்கோடுகள் எதிரிற்றோற்றும். அக்கோட்டைச்சேர்த்து நீட்டுவோமாயினது ராசிமண்டலத்திற்குச் செங்குத்தாய் நிற்கும். சந்திரன் இராசிமண்டலத்திற்கு 5-பாகை சாய்வாயிருப்பினும், இதனுடைய வீதி நிர்ணயமின்றி வருடமொன்றிற்கு 19-பாகைவீதம் மாறிவருவதால் இராசிமண்டலரேகையே இதன் பரிவர்த்தனரேகையாக வெடுத்துக்கொள்ளலாம். அது தெரிந்தபிறகு சூரியனுக்கு நேர்கோணமாயும், பூமிக்கு நேர்கோணமாயும் இரண்டிடங்களும் ஒரேசக்கிரத்திற் படும்படியாக வரைவோமானால் அதனிற் கீழ்புறமிருக்கும் பாகம் தான் ஒளிப்பாகம். இந்த ஒளிப்பாகம் ஆகாசத்திற்றோற்றுவதாற் பூமியில் அந்தவளைவு கோடுடையதாயும் விருத்தாகாரமாகவும் தோற்றும்.

சற்றேறக்குறைய $29\frac{1}{2}$ * நாட்களிற் சந்திரன், சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் அதேயிடத்தில் வருகிறான். இதுதான் சாந்திர

* 29-நாள் 12-மணி 44-நிமிஷம் 3-ஸகண்டு.

மானமாம். இப்பொழுது இந்தியர்களாகிய நமக்கு இருபத்தேழு நக்ஷத்திரங்களுண்டென்றும், இந்த 27-நக்ஷத்திரங்களிலேயே சந்திரன் சஞ்சரிக்கின்றானென்றும், சசியே ஒரு புருஷனென்றும், அவனுக்கு 27-நக்ஷத்திரங்களும் 27-பாரியைகளென்றும், ஒவ்வொரு பாரியையுடன் ஒவ்வொருநாள் கூடியிருக்கின்றானென்றும் புராண கதைகளுமேற்பட்டிருக்கின்றன. அவைகளும் உண்மைக்கு வேறுபாடானவையல்ல. சந்திரன் இருபத்தேழுநாட்களிற்றான் பூமியைச் சுற்றிவருகின்றான்; பூமியின் சுழற்சியால் முன் தான்பெயர்ந்த இடத்திற்குப் போய்ச்சேர இந்த இரண்டுநாளும் அதிகமாகவேண்டியிருக்கிறது. அதுவன்றிப் பகற்காலத்திற் சூரியவொளியாற் சந்திரனது பரிவர்த்தனத்தைக் கண்கூடாகக்காணுவது அசாத்தியமான காரியமாகையாலும், நமது பூர்வீக கணிதசாஸ்திர விற்பன்னர்கள் சந்திரனும் நக்ஷத்திரங்களும் உச்சமாகுங்காலத்தை எளிதில் இரவிற்கண்டு பிடிக்கக்கூடுமாகையாலும் இவ்வித சாம்பிரதாயத்தைப் பொருத்தினரென்று கொள்ளுதலே யமைவுடைத்தாம். இந்த உச்சத்தால் அநேக கணக்குகள் வெகு எளிதாகக் கண்டுபிடிக்கக்கூடும்.

சந்திரனினின்றும் தூரத்திற்குத்தக்கபடி அது நமக்குப் புலப்படுகிறது. அநுமானவானத்தடியிற் பார்ப்பதைவிட உச்சியிற் பார்க்கும்போது பெரிதாகத் தெரிகிறதென்பது பெரியோர் துணிபு. நாம் கண்கூடாகக்காணுங்காட்சியோ, அடிவானத்திற் பெரிதாகவும், உச்சியிற் சிறிதாகவும் காண்கிறோம். இது நமது கண் நம்மை மோசஞ் செய்கிறதேயொழிய, உண்மையில் அது பெரிதல்ல. இதனை மேனாட்டார் தகுந்த கருவிகள்கொண்டு சோதித்திருக்கிறார்கள். நச்சுக் குழாய்வழியாகவாவது, கையைமடக்கிக் குழாய்மாதிரியாகவைத்தாவது பார்க்கும்பொழுது அது ஒரேவிதமாகத்தோன்றும். உச்சியில் வெண்ணிறமாயும், அடிவானத்தடியிற் சிவப்புநிறமாயுங் காண்கிறோம். இந்தச் சிவப்புநிறம் பூமியின் சாயையாலுண்டாவதென முன்னரே குறித்திருக்கிறோம்.

இனிச் சந்திரனது பரப்பைப்பற்றிக் கவனிப்போம். பூமி ஒரு மடங்குடையதென்றால் சந்திரன் 0·2729-மடங்கென்று கணிக்கப்பட்டிருப்பதால் வெகு நிதானமாக இதனெல்லை காணக்கூடும். சந்திரன்

விருத்தாகாரமாகவிருப்பதாகக்கொண்டு அதன் பரப்பு 14,568,000 சதுர மைலென்றும், அல்லது பூமியிற் சற்றேறக்குறையப் பதின் மூன்றிலொரு பாகமுடையதென்றும், கனதி 5,200,000,000 கன மைலென்றும் கணிக்கப்பட்டிருக்கிறது.

சந்திரன் பூமியைச்சுற்றும் ஒரு உபக்கிரகமென முன்னரே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பூமி கோழிமுட்டை வடிவினதாய் ஒரு புறம் நீண்டிருப்பதாற் சந்திரனுக்கும் வீதி அம்மாதிரியாகவன்றோ அமைந்திருக்கவேண்டும். அவ்விதமாக விருப்பதென்றால் நமது பூமி சலனமற்றிருத்தலவசியம். நமது பூமியோ சூரியனைச்சுற்றி ஒருவீதி வழியாக ஓடுகிறதென்று, நாமறிவோம்; அதன் அளவோ சந்திரனுடைய அர்த்தவிட்டத்தைக்காட்டிலும் 400-மடங்கதிகமானது. சந்திரனும் பூமியோடு கூடவே உருளவேண்டியிருப்பதால் சாதாரண அண்டாகிருதியானவீதிவழியாகச் சந்திரன் செல்வதற்குப்பதிலாகச் சன்னல்பின்னலான வழியாக, அதாவது சூரியனுக்கு எப்போதும் புறக்குவிவுடையதாகவும், ஒரு சாந்திரமானமாதத்தில் இரண்டுதடவை பூமத்தியத்தைத் தொடக்கூடியதாயும் அநேக வளைவுகளுடன் செல்லுகிறது. ஆயினும் ஸ்கேல் *என்னும் அளவுப்படி ஒரு பெரிய கடிதத்திற் படம்வரைந்தால் இந்த வளைவு அதிகமாகத்தெரிவதில்லை.

சந்திரனை நல்ல பூர்ணமாயிருக்கும்போது பார்ப்போமாயின், சில பாகங்கள் வெண்மையாயும், சிலபாகங்கள் கரிய நிறமுடையனவாகவுமிருக்கக் காண்கிறோம். சந்திரனிடம் இப்பொழுது வானசாஸ்திரிகள் அநேக மலைகளும், சுத்தமான பள்ளத்தாக்குகளும், கரடுமுரடான தலங்களும், குகைகளும், உன்னதசிகரங்களுமிருப்பதோடு, அநேக எரிமலைகளுமிருக்கின்றனவெனச் சோதித்திருக்கின்றனர்.

---

*ஸ்கேல் என்பது ஒரு அடியுள்ள ஒரு பலகையில் பூமியில் எவ்வளவு அளக்கிறோமோ அதனைக் காகிதத்திற்காட்டுவதற்குக் குறைவாயிருப்பதற்காக ஒரு கடிதத்தில் ஒரு அடி பூமியில் இத்தனைதூரத்தைக் காட்டுமென்று சொல்ல உபயோகப்படுவது. திருஷ்டாந்தமாக $\frac{1}{1000}$ என்றிருப்பின் காகிதத்தில் ஒரு அடிக்கு பூமியில் 1000-அடி என்றருத்தம். ஸ்கேல் மைலுக்கு 8-அங்குலமென்றால், அந்த ஒரு அடிப்பலகை ஒன்றரைமைலையும், அங்குலம் ஒரு பர்லாங்கையும் குறிக்குமென்பதாம்.

அவைகட்கு ஸீ ஆவ் கிரைசின் என்றும், ஸீ ஆவ் டிரான்குவிட்டி என்றும், ஸீ ஆவ் பெகுண்டிட்டி என்றும், ஸீ ஆவ் நெக்டார் என்றும் ஸீஆவ்வேப்பர்ஸ் என்றும், ஸீஆவ் ரெயின்ஸ் என்றும், ஓஷன்ஆவ் டெம்பெஸ்டஸ், ஸீஆவ் மாய்ஸ்சர்ஸ், ஸிஆவ் கிளெஸ்டன் என்றும் பல இடங்களிருக்கின்றன.

மலைகளுள், ஆல்ப்ஸ், காகஸியன்ரேஞ்ச், அபினைன்ஸ் என்பவை பிரதானமானவை. முன்னது 276 - மைல் நீளமுள்ளதாயும், பின்னையது 373-மைல் நீளமுள்ளதாயுமிருக்கிறது. இவைகளைத் தவிர்த்து தோரஸ்மலை, டொர்டெல், லீப்னிடஸ் என்பவைபோன்ற பல விருக்கின்றன. இவைகளெல்லாம் தவிர்த்து அநேக எரிமலைகளு மிருக்கின்றன. (தொடரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ

நுண்பொருண்மாலை.

(௫௫௫-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

௧௩௩௦. "ஊடுதல்..............பெறின்."

நு - லை:—இதுவுமது. காமநுகர்ச்சிக்கின்பமாவததனை நுகர்தற் குரியராவா ராராமைபற்றித் தம்முளூடுதலு மவ்வூடுதற்கின்பமா வததனை யளவறிந்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயி னம்முயக்கமென்றவாறு. கூடுத லொத்தவுணர்வினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானு முதிராதபுலவியாயவழிக் கலவியின்பம்பயவாமையானு மிவ்விரண்டற்கு மளவறிந்து நீங்கு தலரிதென்பதுபற்றிக் கூடிமுயங்கப் பெறினென்றான். அவ்விரண் டின்பமும் யான் பெற்றேனென்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவியென நால்வகையாகக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றாமையுள்ளும் ஆற்றாமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறை

யழித லிருயவற்றுள்ளும் விதுப்பு அவர் வயின் விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்ப லிருயவற்றுள்ளும் புலவி நெஞ்சொடுபுலத்தன்முத லூடலுவகையீருயவற்றுள்ளுங் கண்டுகொள்க.

அஃதேல் வடநூலாரிவற்றுடனே சாபத்தினைய நீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை யைவகைத்தென்றாராலெனின் அஃதறம்பொரு ளின்ப மென்னும் பயன்களு ளொன்றுபற்றியபிரிவின்மையானும் முனிவராணையா னொரு காலத் தொருகுற்றத்துளதாவதல்ல துலகி யல்பாய் வாராமையானு மீண்டொழிக்கப்பட்ட தென்ப.

திருத்தகுசீர் வள்ளுவர்தந் தெய்வப் பயனின்
கருத்தம்மதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனென்பான்
மன்னு முயர் நாமன் வந்து. (க)

பாயிரநான் கில்லிருபான் பத்தோ டியைந்தமூன்
றோப்வி றுறவறமொன் றாழாகத்—தூய
வறத்துப்பால் முப்பானெட் டாமென் றுரைத்தார்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து. (உ)

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துரைநா டரண்பொரு ளோவ்வொன்—றுரைசால்
படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடியெழுபான் றொக்க பொருட் .... (௩)

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லவர்தம்மிற்
பூண்பா லிருபாலோ ராறுகு—மாண்பமைந்த
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்து வள்ளுவனார் நன்கு. (௪)

புணர்தல் பிரிதற் பொருள்களவு கற்பென்
றுணருமிரு கூறு முரைக்கிற்—புணருங்
களவே ழுறுமூன்று கற்பிவையை யைந்தா
மளவுமுகா மத்துப்பா லாம். (௫)

நுண்பொருண்மாலை முற்றும்.

பத்திராதிபர்.

புத்தக வரவு.

—ஃ:(o):ஃ—

சர்வமத ஐகமத்திய சாரசங்கிரகம்:—இது-ஆங்கிலத்தில் மாது ஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையவர்களாற் செய்யப்பெற்றிருந்தது. இதனைத் தமிழர்களு மெளிதி னுணரும்பொருட்டு மதுரைப் பிர்ம்மக்ஞான சபைத்தலைவர் ஸ்ரீமத்-ப. நாராயணையர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இது ஒவ்வொரு மதஸ்தருக்கும் பிறமதத்திற் கொள்ளும் துவேஷத்தைப்போக்கி ஐகமத்தியத்தை யுண்டாக்கவல்லது. இத்தகைய புத்தகங்கள் பல எழுதி வெளியிட்டு வரும் ஐயரவர்களின் இடைவிடா முயற்சியும், லோகோபகார சிந்தை யும் மிகப் பாராட்டற்பாலன. இதன் விலை அணா—4.

மதுரைத் திருவிளையாடற்புராண உபந்யாசம்:— இது யாழ்ப் பாணத்து நல்லூர் உபய வேதாகம பண்டிதரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவருமாகிய ஸ்ரீமத்-வே. கனகசபாபதி ஐயரவர்களாற் செய்யப்பெற்றது. இதனுள் மூர்த்தி தல தீர்த்த வைபவங்களும் அவற்றின் பெயர்களும் குலசேகர பாண்டியன்முதற் கூன்பாண்டிய னீறாயுள்ள பாண்டியர்களின் வரிசைக்கிரமமும், அவ ருள் இன்னின்னார் காலத்து இன்னின்ன திருவிளையாடல் நடந்த தென்பதும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன்விலை விவரமுதலியன தெரியவிரும்புவோர் ஆக்கியோர்க்கெழு தித் தெரிக.

---

(1) விவேகசிந்தாமணி, (2) அறப்பளீசுரசதகம், (3) திருவேங் கட சதகம் இப் புத்தகங்கள் வேலூர்க்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-பு க. ஸ்ரீநிவாஸாசாரியாரால் அரும்பதவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளன. இவற்றுள் விவேகசிந்தாமணியின் விலை அணா 0-1-6 மற்றவையிரண்டும் தனித்தனி விலை அணா 2.

☞ மேற்கண்ட புத்தகங்கள் 5-ம் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப் படி சேர்க்கப்பட்டன.

ப—ர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

1912-ஸு ஜூலைமீ 1உ முதல 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
காணுகோத்தான் மகா ா-ா-ஸ்ரீ சா. ரூம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து பரிதாபி-ஸு ஆனிமீ த்துக் குறிய மாதச்சந்தா வரவு ரூ ...	50	0	0	சங்கம் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ...	377	2	2
1912ம் ஸு ஜூலைமாதத்துக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தா வரவு ...	50	0	0	கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காக செல்லாக்கியது ரூ. ...	30	9	2
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	89	5	0	பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 10—15—0			
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவரவு 293—1—6				ஷை ஆபீஸ் ரயில்வேசார்ஜ் செலவு 1—0—0			
சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 54—11—0				ஷை ஆபீசு கண்டின்ஜென்ஸி செலவு 73—0—1			
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	347	12	6	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	84	15	1
பைண்டிங் ஆபீசு வரவு ... 127—11—0				பிரிண்டிங்ஆபீஸ் டைப்ஸ்வாங்கியது 4—12—0			
				பிரிண்டிங்ஆபீஸ் ஸ்டேஷனரிச்செலவு 50-8-9			

572

சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ...	10—12—0			
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...		138	7	0
புத்தக விற்பனை வரவு ரூ ...		75	1	0
சங்கம் காவிகிலம் மரக்கடை வாடகை நாளது பரீதாபி-ஹு ஆனி மீ' த்துக்கு வரவு ...	55—0—0			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு	8—0—0			
ஆத்தூர் விசுவநாதன் செட்டியாரவர்களிடமிருந்து சங்கத்துக்கு நன்கொடை வரவு ரூ.	2—0—0			
கோ ஆபரேடிவ் ஸ்டோரில் போட்டுவரும் தொகைக்கு வட்டிவகையில் வரவு ரூ.	6—8—2			
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ ...		71	8	2

ஷெ ஆபீஸ் ரயில்வேசார்ஜ் சிலவு	0—12—0			
ஷெ ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு	7—0—0			
ஷெ ஆபீஸ் சண்டின்ஜன் வழிச்செலவு	3—15—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		66	15	9
போஸ்டேஜ் வகையிற் செலவு ...		22	0	0
சங்கம் ஆபீஸ் இருக்கிற கட்டிடத்துக்கு சென்ற ருன்மீ' த்துக்கு செல்லாக்கிய வாடகை ரூ		25	0	0
பிரிண்டிங் ஆபீஸ் உபயோகத்துக்கு பிளாக் வாங்கியவகையிலும், சனம் பிரசிடெண்டவர்களின் கையொப்ப சாப்பாசெய்தவகையிலும் செலவு ரூ.		5	0	0
லைபிரேரி உபயோகத்துக்காக புத்தகங்கள் வாங்கிய வகையிற் செலவு ரூ ...		4	6	0
கலாசாலை உபயோகத்துக்கு கரோசன் ஆயில் வாங்கியது ரூ.	1—15—0			
ரசீதுலேபிள், வண்டிவாடகை இன்சூர் வகையரு செலவு ரூ	0—15—0			
ஆபீஸ் ஸ்டேஷனரி கண்டின்ஜன்வி வகையரு சிலவு ரூ	1—3—3			
பிரிண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்கு எக்ஸ்ட்ராகொடுத்தது ரூ.	7—11—0			

				புவனேந்திரகாவிடி எலநோட்டீஸ் சுதேசமித்திரன் பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய மணியார்டர்கமிஷன் உள்பட அனுப்பியது ரூ. 3–3–0			
				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் ரூ ... 54—11-0			
				ஷை ஆபீஸ் பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் வகைக்குச் செல் ரூ 10—12-0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	80	6	3
				*As per P. B. No. 263 of Madura Co-oprative Stores-Rs. 581—8-2 ஆகமொத்தம்செலவு	696	6	5
ஆக மொத்தம் ரூ	822	1	8	போகபாக்கியிருப்பு*	652	6	10
சென்ற ஜூன்மீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	526	11	7	By R. T. R. No. 23/95138 of Pudukotta-Samasthanam Rs. 50-0-0.			
ஆக மொத்தம் ...	1348	13	3	With the Manager Rs. } 20–14-8 ஆக மொத்தம் ...	1348	13	3
ஆக மொத்தம் ரூ ...	1348	13	3	Rs. 652-6-10 ஆக மொத்தம் ...	1348	13	3

T. A. SUBBUVENKATARAMA IYER,
Manager.
13—8—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
20—8—12. *Auditor.*

573

574

மெர்கல்.

கொடிய மேகரணத்தைத் தீர்க்க உள்ளே சாப்பிடுகிற மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

மேர்கல் நல்ல ஜீரணசக்தியைக் கொடுக்கக்கூடியது. வயிற்றுவலியையாவது வயிற்று உளச்சலையாவது உண்டாக்கமாட்டாது. குண்டிக்காயிலும் எரிச்சல் உண்டாக்க மாட்டாது.

மேர்கலினால் சோஸ்தப்படுத்தப்படும் வியாதிஸ்தர்களுக்கு யாதொரு வலிகளையாவது கெடுதல்களையாவது உண்டுபண்ணுகிற தில்லை. இதில் நிரம்பவும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இந்தமாதிரியாக வைத்தியஞ்செய்வதானது ஒருவனுடைய அவஸ்தையை வெளிப்படுத்தாமல் செய்கிறது.

இது எல்லா ரசாயன மருந்து ஷாப்புக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

HOLZ MULLER & SCHMIDT,
7, Colootola Street,
CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,
CHEMISTS,
MADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன். [7]

575

குந்தல கௌமதி.

என்னும் கூந்தலை வளர்க்கும் தைலத்தை இடைவிடாமல் உபயோகிப்பதினால் மயிர்க்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகள் நீங்கும். இது மயிருடன் சேர்ந்த கபாலத்தோலை ஜிலுஜிலுப்பாகவும், குளிர்ச்சியாகவும் செய்கிறது. மயிர்க்கால்களுக்கு ஊக்கமும் வளரும்சக்தியையும் ஏற்படுத்தி மயிரை மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கிறது.

பெரிய அளவு புட்டி 1-க்கு 12-அணா தபால் சார்ஜ் உள்பட ரூ 1- 3-0

ஷை ஷை 3-க்கு ரூ 2 ஷை ஷை ரூ 2-11-0

வேண்டுவோர், சென்னை ஏஜண்டுகளாகிய, எம். ஷாஹீயர்தயால் அண்டு கம்பேனி, 144—5, சீனபௌஸார் ரோட்டு, சென்னைக்கு எழுதிக்கொள்ள வேண்டியது.

Kaviraj. R. C. Sen L. M. S.

கவிராஜ் ஆர். ஸி. ஸென். எல். எம். எஸ்.

216 Cornvallis Street,

காரன்வாலீஸ் தெரு,

CALCUTTA

கல்கத்தா.

576

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

பூரண ஆரோக்கியம்

என்பது யாதோரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைநதிருக்கிறது ஆகையினலே எப்பொழுதாவது மாறு தல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதா ய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமேனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணி கள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோ கித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண் டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத் து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவை கள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

☞ இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினுல் இனமாய்க் கோடுக் கப்படுகிற எங்கள் 180 பக்கங்கோண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22 பிராட்வே மதிராஸ்.

பல கண்காக்ஷிகளில் மேடல்கள் பேற்ற அபூர்வ ஔஷதங்கள்

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

என் ஆயுர்வேத ஔஷதசாலையை பறங்கிப்பேட்டையிலிருந்து

ஸ்திரமாக தஞ்சாவூருக்கு மாற்றியாய்விட்டது.

26. **சுகந்த மூக்குத்தூள்:**—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒருநாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய் கலந்துகொண்டால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்யமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம்போகாமலிருப்பதுமன்றி, வாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவசாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துற்நாற்றத்தை நீக்கி, சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்தமூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்கு போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. சிலவு 1-முதல் 3-சீசாக்கள்வரையில் அணா 3-பிரத்தியேகம். 4-முதல் 6-சீசாக்கள்வரையில் வி. பி. சிலவு அணா 5-பிரத்தியேகம். 7-முதல் 12-சீசாக்கள்வரையில் வி. பி. சிலவு அணா 7-பிரத்தியேகம்.

27. **அசோக கிருதம்:**—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலை நோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜோதோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம். சூதகசூலை ரோகங்களுக்கும், மற்றும் அநேக யோனி சம்பந்த ரோகங்களுக்கும், அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1-அல்லது 2-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5. பிரத்தியேகம்.

578

உ

விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியா விஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங் களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிரா யமெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதனபுஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப்பத்திரிகை விஷயமாய் ஏற் படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகையறுக்களை யும், ஷை தமிழ்ச் சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளை யும், தமிழ்ச்சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய ஸகல தகவல் களையும் பற்றி எழுதிக்கொள்ளவேண்டியவர்கள் ஷை தமிழ்ச் சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

(2) மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பைண்டு ஆகாததாக ஏராள மான சங்கப்பதிப்புப் புஸ்தகங்கள் விற்பனையாகவேண்டியவைகளாக விருப்பதால், ஒரே தடவையில் 50-க்கு மேற்பட்ட பிரதிகள் வாங்க விருப்பமுள்ளவர்களுக்கு இதன் மூலமாகத் தெரிவிக்கிற தென்னவென்றால், அதிகமான பிரதிகள் வாங்குவோர்களுக்கு ஷை தமிழ்ச் சங்கம் பிரஸிடெண்டு அவர்கள் ஒவ்வொரு ஆர்டருக் குத் தக்கவாறு 100-க்கு 40 - ரூபாய் வரை கமிஷன் கழித்துக் கொண்டு ரொக்கமாக விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாமென்று உத்தரவு செய்திருக்கிறபடியால், தேவையுள்ளவர்கள் உடனே மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆபீஸ் மானேஜருக்கு மனுச் செய்து கொள்ளவும்.

குறிப்பு:—சங்கத்தின் மெம்பர்கள், சந்தாதார்கள் சங்கம் ஆபீசுக்கு எழு தும் கடிதம் வகையராக்களில் தங்கள் பேருக்கு வரும் "செந்தமிழ்" பத்திரிகை விலாசத்தில்கண்டிருக்கிற நிம்பரைக் குறிப்பிட்டு எழுதவும்.

T. A. Subbuvenkatarama Aiyer,

Manager.

579

No. 2.

CHILDREN IN INDIA.

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

SCOTT's EMULSION

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAND

580

No. 3.

CHAMBERLAIN'S COUGH REMEDY.

இருமலுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.

இது,
இருமல், சீதளம், சளிமாந்தம்,
நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல்
முதலான: தொண்டை, மார்வியாதிகளை
எல்லாம் நீக்கும்.

இருமல் விஷயத்தில் அசட்டையாயிருக்கலாகாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டு விடும்.

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த இருமல் மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சிலியுண்டாக்கும், இருமலையும் போக்கும் நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போக வரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திரவத்தைக் குறைக்கும் நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன் துரை செய்த இருமல் மருந்தில் அபினிக் கலப்பில்லை.

☞ இது மூலிகைமயமான மருந்து.

☞ கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும்.

சின்ன புட்டி ரூ. 1—0—0 பெரிய புட்டி ரூ. 2—0—0